10704

சமூக நலம் – குழந்தைகள் நலம் – ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தத்தெடுக்கும் மாநில அரசுப் பெண் பணியாளர்களுக்கு 180 நாட்கள் குழந்தை தத்தெடுப்பு விடுப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5) துறை

அரசாணை (நிலை) எண்.56 நாள் 10.04.2012
பங்குனி 28, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண்.342, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 08.12.1995.
2) அரசு கடித எண்.21559/சந.5/1996–3, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 14.02.1997
3) அரசாணை (நிலை) எண்.140 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.09.2008.
4) மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் அறிவிக்கை எண்.13018/1/2009–நிர் (விடுப்பு), நாள் 22.07.2009.
5) சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.35678/குந1/2007, நாள் 02.02.2010 மற்றும் 11.05.2010.

---

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றில், குழந்தைகளைத் தத்தெடுக்கும் தாய்மார்களுக்கு, குழந்தைக்கு ஓராண்டு நிறைவடையும் வரையில் குழந்தையின் வயதிற்கேற்ப, அந்தத் தாய் தனக்கு தகுதியுள்ள விடுப்பினை எந்த மருத்துவச் சான்றும் இல்லாமல் சிறப்பு விடுப்பாக எடுத்துக்கொள்ளலாம் என ஆணையிட்டுள்ளது. மேலும் தத்தெடுக்கும் குழந்தையின் வயது, 1 மாதத்திற்குள் இருப்பின் 1 ஆண்டு வரை விடுப்பும், தத்தெடுக்கும் குழந்தையின் வயது 6 மாதம் மற்றும் அதற்குமேல் இருப்பின் 6 மாதம் வரை விடுப்பும், தத்தெடுக்கும் குழந்தையின் வயது 9 மாதத்திலிருந்து 1 வயதிற்குள் இருப்பின் 3 மாதம் வரை விடுப்பும் எடுக்கலாம் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாநில அரசுப் பணியாளர்களுக்கு, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல, 135 நாட்கள் குழந்தை தத்தெடுப்பு விடுப்பினை பின்வரும் நிபந்தனைகளுடன் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது:-

அ) தத்தெடுக்கும் குழந்தை ஒரு வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்;
ஆ) குழந்தை, சட்டப்படி தத்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்;
இ) முறையாகத் தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மருத்துவச் சான்று ஏதுமின்றி வழங்கலாம்.
ஈ) மைய அரசு ஆணை வெளியிட்ட (31.03.2006) நாளிலிருந்து, முன்தேதியிட்டு விடுப்பு வழங்கலாம்.

www.kalvikural.com

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட மத்திய அரசின் அறிவிக்கையில், ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளை தத்தெடுக்கும் பெண் அரசுப் பணியாளர்களுக்கு குழந்தை தத்தெடுப்பு விடுப்பினை 135 நாட்களிலிருந்து 180 நாட்கள் உயர்த்தியும், அரசுப் பணிபுரியும் ஆண் பணியாளர்களுக்கு தந்தைக்குரிய விடுப்பாக 15 நாட்கள் (Paternity Leave) வழங்கியும் ஆணையிட்டுள்ளது.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர், மத்திய அரசு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதைப் போலவே, ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளை தத்தெடுக்கும் மாநில அரசுப் பெண் பணியாளர்களுக்கும் 180 நாட்கள் குழந்தை தத்தெடுப்பு விடுப்பு வழங்குமாறும், மாநில அரசு ஆண் பணியாளர்களுக்கு தந்தைக்குரிய விடுப்பாக 15 நாட்கள் வழங்குமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. சமூக நல ஆணையரின் பரிந்துரையை பரிசீலித்த அரசு, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல், மாநில அரசுப் பெண் பணியாளர்களுக்கு 180 நாட்கள் குழந்தை தத்தெடுப்பு விடுப்பினை பின்வரும் நிபந்தனைகளுடன் வழங்கி ஆணையிடுகிறது.

அ) தத்தெடுக்கும் குழந்தை ஒரு வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்;

ஆ) குழந்தை, சட்டப்படி தத்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

இ) முறையாகத் தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மருத்துவச் சான்று ஏதுமின்றி வழங்கலாம்.

ஈ) மாநில அரசு பெண் பணியாளர்கள் ஏற்கனவே 135 நாட்கள் குழந்தை தத்தெடுப்பு விடுப்பை துய்த்திருந்து, இவ்வாணை வெளியிடப்படும் நாளின்போது அவ்விடுப்பானது காலாவதி ஆகாமல் இருந்தால், அவ்விடுப்பை 180 நாட்களுக்கு நீட்டித்துக் கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–2
தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம், சென்னை–9
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
சமூக நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்.

நகல்:
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (அவி.3/அவி.4) துறை, சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
இ.கோ./உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

www.kalvikural.com